# காலந்தோறும் கல்வி

***முனைவர் தி. ஜெயசித்ரா***
முதுகலைத்தமிழாசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி
திருவளர்சோலை, திருச்சிராப்பள்ளி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5219

## முன்னுரை

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி. மனிதனை விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி.

ஒரு நாடு முழுமையான மேம்பாடு அடையக்கல்வி இன்றியமை யாததாகும். நாடு நலம் பெறச் சமுதாயம், பொருளாதாரம் பண்பாடு போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இந்த மாற்றங்கள் கல்வி வாயிலாக எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காண்போம்.

## கல்வியும் கற்றலும்

கல்வியும் கற்றலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. கற்றல் என்பது பிறந்தது முதல் இறப்பது வரை தொடர்ந்து நமது வாழ்நாள் முழுவதும் நடந்து வருகிறது.

Education என்பதற்கு “வெளிக்கொணர்தல்” என்று பொருள். குழந்தையிடமும், மனிதனிடமும் உள்ள உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறப்பான சிறந்த பண்புகளை வெளிக் கொண்டு வருவதே கல்வி என்கிறார் மகாத்மா.

சுவாமி விவேகானந்தர் மனிதனிடம் பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிறைநிலையினை மலரச் செய்வதே கல்வி என்றார்.

வள்ளுவரும்,

**“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு”**

**(திருக்குறள் - 396)**

என்கின்றார்.

(ஊறும் = உள்ளிருந்து வருதலைக் குறிக்கும்)

பிறக்கும்போது ஒன்றுமறியாத குழந்தையைக் கல்விதான் முழுமனிதனாக மாற்றுகின்றது. குழந்தை கல்வி கற்கும்போது சமூக நெறிகளை நன்கு அறிந்து கொள்கிறது. அதனைத் தனதாக்கிக் கொள்கின்றது. மனத்திறன்களையும் வளர்த்துக் கொள்கின்றது.

**கல்வியின் நோக்கம்**

தனிமனிதனைச் சமூதாயத்துக்கு ஏற்றவனாக மாற்றுதலே கல்வியின் நோக்கமாகும்.

**"அறிவு மற்றும் ஆன்ம வளர்ச்சியே கல்வியின் நோக்கம்" என்கிறார் வேதகால அறிஞர் மனு. "அதிகமான ஆற்றலைப் பெற உதவுவதே கல்வியின் நோக்கம்"**

***(வளர்ந்தெழும் இந்திய சமுதாயத் தில் கல்வி (ப-11)***

என்கிறார் பிளாட்டோ.

ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சிக்கும், பயிற்சிக்கும் கல்வி வழிகாட்ட வேண்டும். கல்வியினால் மட்டுமே சமூக மாற்றத்தினை உண்டு பண்ண முடியும்.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப கல்வியின் பாடப் பொருளும், கற்றல் கற்பித்தல் முறைகளும் மாற வேண்டும். புதுமை பெற வேண்டும்

**குருகுலக் கல்வி**

பண்டைய இந்தியாவில் குருகுலக் கல்வி முறை இருந்து வந்தது.

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை "ஓதற்பிரிவு" என்று குறிப்பிடுகிறது. தொல்-அகம்-25)

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"**

***(புறம்-183)***

என்னும் புறப்பாடல் ஆசிரியரிடம் மாணவன் கல்வி கற்ற முறையை விளக்குகிறது.

பண்டைக்காலத்தில் (ஆசிரியர்) இல்லமே பள்ளிக் கூடமாக இருந்தது. 8 வயதில் உபநயனம் (புணூற் சடங்கு) என்ற சடங்கைச் செய்த பிறகு மாணாக்கர் கல்வி கற்க ஆசிரமங்களில் வாழ்ந்த ரிஷி முனிவர்களிடம் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு வேதங்கள், தத்துவம், நீதியியல், கணிதம், வணிகம், போர்முறை, சோதிடம் போன்றவை கற்பிக்கப்பட்டன.

குரு பாடங்களை வாய்மொழி வாயிலாக விளக்கமாகக் கூறுவார். மாணாக்கர் கவனமுடன் கேட்பர். மனனம், ஒப்புவித்தல், செய்முறைப்பயிற்சி போன்ற கற்பித்தல் முறைகள் கடைபிடிக்கப்பட்டன.

(எ.கா) கரூர்- மகாதானபுரம் - ரிக்வேதப்பாடம் கற்பிக்கப்படுகிறது.

திருவரங்கம், காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் குருகுலக் கல்வி முறை செயல்பட்டு வருகிறது.

**புத்தமதக் கல்வி**

வேதகால குருகுலக்கல்வி முறைக்கு மறுப்பாகப் புத்தமதக் கல்வி தோன்றியது. துறவு வாழ்க்கை, நன்னடத்தை, மருத்துவம், வான சாஸ்திரம், ஓவியம், சிற்பம், தர்க்க சாஸ்திரம், கணிதம்,... முதலிய பாடப்பிரிவுகள் கற்பிக்கப்பட்டன.

புத்த மடாலயங்கள் கல்வி நிலையங்களாக இருந்தன. புத்தமதத் துறவிகளே ஆசிரியர்களாக இருந்தனர். புத்தமதக் கோட்பாடுகளோடு கூடிய கற்பித்தல் முறை நிலவியது. இவற்றிற்கு படித்தல், எழுதுதல், கணித்தல் போன்றவை அடிப்படைத் திறன்களாக அமைந்தன.

தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்த சீனப் பயணி யுவான்சுவாங் அங்கிருந்த பௌத்த பல்கலைகழகத்தில் தங்கிச்சிறப்புரை ஆற்றியிருக்கிறார்.

(மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தமிழ் (ப-94)

**சமணமதக் கல்வி**

கல்வி, மருந்துவம், உணவு, அடைக்கலம் ஆகிய 4 கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.

பள்ளி என்ற சொல்லுக்கு படுக்கை என்று பொருள். மாணாக்கர் சமணத் துறவிகள் தங்கியிருக்கும் இடங்களுக்கு சென்று கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அவ்விடங்கள் அழைக்கப்படலாயிற்று.

திருச்சி மலைக் கோட்டையிலும், தமிழகத்தின் புகழ்பெற்ற சமண குன்றான கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள், சமணப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கை கள் பற்றி குறிப்பிடுகின்றன.

"வந்தவாசிக்கு அருகிலுள்ள வேடல்" என்னும் ஊரில் உள்ள சமணப்பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். "பட்டினக்குரத்தி" என்னும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியிருந்தார்.

(மேல்நிலை முதலாமாண்டு பொது த்தமிழ் (ப-94)

என்று குறிப்பிடுகின்றது.

பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையதாக சங்கம் என்ற அமைப்பு அமைந்திருந்தது. இது தவிர மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப் பள்ளி, பௌத்தப்பள்ளி போன்ற அமைப்புகள் சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன.

மன்னராட்சிக் காலத்தில் போர்ப்பயிற்த் தருவதும் முக்கியமான கல்வியாக கருதப்பட்டது. கற்பிக்கும் ஆசிரியர்களும் மூவகை பிரிவினராக இருந்தனர்.

**கணக்காயர்** -எழுத்து, இலக்கியம், உரிச்சொல் (நிகண்டு), கணக்குக்கற்பிப்போர்

**ஆசிரியர் -** மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர்.

**குரவர் -** சமய நூலும், தத்துவ நூலும் கற்பிப்போர்.

இவர்களிடம் கற்ற மாணவர்களை முறையே சிறுவன், மாணவன், கேட்போன் என்று வகைப்படுத்தினர்.

பட்டி மண்டபம், சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலை சுட்டுகிறது.

**"ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்**
**பட்டி மண்டபத்துக் பாங்கறிந்து ஏறுமின்"**
(மணிமேகலை 60,61)

என்று கூறுகிறது.

### திண்ணைப் பள்ளிகள்

தெற்றிப் பள்ளிகள் என்றழைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன.

திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கணக்காயர்கள் என்றழைக்கப்பட்டனர். ரெவரண்ட் பெல் என்ற ஸ்காட்லாந்து பாதிரியார் தமிழகத் திண்ணைப்பள்ளிக் கல்விமுறையைப் போன்றே,

ஸ்காட்லாந்தில் மெட்ராஸ் காலேஜ் என்ற பெயரில் ஒரு பள்ளியை நிறுவினார். இக்கல்விமுறை மெட்ராஸ் சிஸ்டம், பெல் சிஸ்டம், மானிடரி சிஸ்டம் என்றழைக்கப்பட்டது.

சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன. இவற்றின் கல்வித்தரம் ஐரோப்பிய நாடுகளில் அப்போதைய கல்வித்தரத்தை காட்டிலும் உயர்ந்ததாக இருந்ததாக தாமஸ் மன்றோ குறிப்பிடுகிறார்.

### திண்ணைப்பள்ளிக் கூடத்தில் பயின்ற சான்றோர்

1. வெள்ளக்கால் ப. சுப்பிரமணியனார் - திருநெல்வேலி கணபதியார் திண்ணைப்பள்ளி (உயிரின மருத்துவர், மொழிபெயர்ப்பாளர்)
2. ந.மு. வேங்கடசாமி - வல்லம் குரு சாமி வாத்தியார் திண்ணைப்பள்ளி (சிலப்பதிகார உரையாசிரியர்)
3. வ.சுப.மாணிக்கம் - மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப்பள்ளி (மதுரை பல்கலைக்கழக துணைவேந்தர்)

**உயர்நிலைக் கல்விமுறை**

தனி நிலையில் புலவர்களிடத்தில் கற்கும் உயர்நிலைக் கல்விமுறையும் சமூகத்தில் நிலவியது.

திருவாவடுதுறை ஆதினமடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்து வான் மீனாட்சி சுந்தரனாரிடம் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதர் இம்முறையில் பாடம் பயின்றார்.

**கல்வி சிந்தனையாளர்களின் கல்வித்தத்துவம்**

**விவேகானந்தர்**

குருக்குலக் கல்விக்கு ஆதரவு கொடுத்தவர். அன்பு, உண்மை, அடக்கம் இவைதாம் இன்றைய கல்வியின் தேவைகள் என்று கூறியுள்ளார்.

மாணவர்கள் அறிவு வேட்கையுடனும், விடாமுயற்சியுடன்கற்கவேண்டுமென்றும், ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைக்கு இறங்கிவந்து கல்வியைக் கற்றுத்தர வேண்டும் என்கிறார்.

**அரவிந்தர்**

குருகுலக்கல்வி முறையில் நம்பிக்கை கொண்டவர் பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல் தொடுதல் போன்ற ஐம்புல உணர்ச்சிகளுடன் ஆறாவது உணர்ச்சி எனப்படும் எண்ணத்தையும் சேர்த்துக் கொண்டு கல்வி நடைபெற வேண்டும் என்கிறார். பெண்கல்விக்கு ஆதரவு தந்தவர் 1943-இல் புதுச்சேரியில் இவரால் உருவான ஆரம்பப்பள்ளி, 1952-இல் அரவிந்தர் பன்னாட்டுப்பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது.

**தாகூர்**

செய்து கற்றலை ஆதரித்தவர் பிறநாட்டு கலாச்சாரம், இலக்கியம், இயற்கை வளம் போன்ற அனைத்தையும் தாய்மொழி வாயிலாகக் கற்றல் நன்று என்று எடுத்து ரைக்கிறார்.

இவரால் 1901-இல் உருவான ஆரம்பப்பள்ளியே சாந்தி நிகேதன். 1921-இல் இவரால் துவக்கப்பட்ட விஸ்வபாரதி பல்கலைக்கழகம் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக விளங்குகிறது.

**காந்தியடிகள்**

தாய் மொழிக்கல்வியோடு, ஒரு கைத் தொழிலையும் கற்றுத் தரும்படி சிறந்த கல்வி இருக்க வேண்டும் என்கிறார்.

**ரூஸோ**

உற்றுக்கற்றல், செய்து கற்றல், அனுபவங்கள் மூலம் கற்றல், ஆராய்ந்தறிந்து கற்றல் போன்ற கற்றல் முறைகள் கற்பித்தலில் இடம்பெறவேண்டும் என்கிறார்.

**ஜான்டூயி**

இவரது இலட்சியப்பள்ளியில் ஆசிரியர் குழந்தைகளுக்கு, நண்பராகவும் தத்து வஞானியாகவும் வழிகாட்டியாவும் திகழ வேண்டும் என்கிறார்.

**மாண்டிகோரி**

மாண்டிகோரி பள்ளிக்கூடம் - குழந்தைகளின் வீடு என்றழைக்கப்படுகிறது.

மனக்குறைபாடுள்ள குழந்தைகளின் புலன்களுக்கு முறையான பயிற்சியினைக் கொடுத்து அவர்களின் அறிவுத் திறமையை வெளிக் கொணரலாம் என்கிறார். இன்று நடைமுறையிலுள்ள குழந்தைகள் பள்ளிகளில் இவரது கல்விக்கருத்துகள் செயல்படுத்தப்படுகின்றன.

**முடிவுரை**

கல்வியே அழியாச் செல்வம். அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்க வளர்ச்சிக்கும் சிறந்த செயல்களைச் செய்யும் திறன்களைப் பெறுவதற்கும் கல்வியே உதவுகிறது.

கல்வியின் பொருட்டே ஒருவருக்கு பெருமிதம் தோன்றும் என்று கூறுகிறது தொல்காப்பியம்.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப கல்வியின் பாடப் பொருளும், கற்றல் கற்பித்தல் முறைகளும் மாற்றம் பெற்று உள்ளன. ஒருவன் கற்ற கல்வி பல தலைமுறைக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்னும் பரந்த நோக்கிலே “காலந்தோறும் கல்வி” பல படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது.


| | |
|---|---|
| *1* | நூ/பெ திருக்குறள்<br>பரிமேலழகர் உரை, விசா பப்ளிகேஷன்ஸ்,<br>55. வெங்கட்நாராயணா சாலை,<br>தி.நகர், சென்னை - 600017. |
| *2* | நூ/பெ வளர்ந்தெழும் இந்திய சமுதாயத்தில் கல்வி.<br>ஆஃபெ டாக்டர். வி. நடராஜன்,<br>டாக்டர். பி. இரத்தினசபாபதி, டாக்டர். ஆர். ராஜமோகன்.<br>சாந்தா பப்ளிஷர்ஸ்,<br>13(5) ஸ்ரீபுரம் 2வது தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-600014.<br>முதல் பதிப்பு நவம்பர் -2013. |
| *3* | நூ/பெ தொல்காப்பியம்<br>பொருளதிகாரம்<br>ஆ/பெ. தொல்காப்பியர்<br>உ/பெ. முனைவர் ச. சுபாஷ்சந்திரபோஸ்<br>வெளியீடு : இயல்<br>23பி/2739 தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு,<br>தெற்கலங்கம், தஞ்சாவூர் - 613001.<br>முதற்பதிப்பு - 2016. |
| *4* | நூ/பெ புறநானூறும் திருக்குறளும் ஒப்பாய்வு<br>ஆ/பெ முனைவர் சரளா. இராசகோபாலன்<br>ஒளி ப்பதிப்பகம், டாக்டர் ரங்கா சாலை,<br>சென்னை - 600018.<br>பதிப்பு - டிசம்பர் 2013. |
| *5* | நூ/பெ. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தமிழ்.<br>பள்ளி கல்வித்துறை,<br>மாநிலக் கல்வி மற்றும் ஆராய்ச்சி<br>மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>SCERT 2018. |
| *6* | நூ/பெ. சங்க இலக்கியம் மணிமேகலை.<br>ஆ/பெ. தி.நா. அங்கமுத்து முதலியார்,<br>பெரியண்ணன் நூலகம்,<br>பிள்ளையார் கோவில் தெரு, கீழ் எடையாளம் அஞ்சல்,<br>விழுப்புரம் (மாவட்டம்).<br>பதிப்பு : 2010. |